## பத்திரிக்கை செய்தி

## இறுதி வருங்கால வைப்பு நிதியை பெற்றுத்தர ரூ.3,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய உதவியாளர் கைது

புகார்தாரர் திரு.ராமதாஸ், ஓய்வு பெற்ற கிராம உதவியாளர், அருமந்தை கிராமம், பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் கடந்த 31.05.2024ல் பெரிய முல்லைவாயில் கிராம அலுவலகத்தில் கிராம அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். பணி ஓய்வு பெற்ற பின் வழங்கப்படும் இறுதி வருங்கால வைப்பு நிதியானது AG அலுவலகத்திலிருந்து பொன்னேரி தாலுக்கா அலுவலகத்தில் பெறப்பட்டது. இறுதி வருங்கால வைப்பு நிதி மசோதாவை தயாரித்து கருவூலத்திலிருந்து பெற்றுத்தர திரு.ஷேக் முகமது, உதவியாளர், பொன்னேரி தாலுக்கா அவர்கள் தனக்கு ரூ.3,000/-லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார், லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், திருவள்ளூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 25.09.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ஷேக் முகமது, உதவியாளர், அவர்கள் லஞ்ச பணம் ரூ.3,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.